2539

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2021 (2022)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2021 (2022)
General Certificate of Education (Adv. Level) Examination, 2021 (2022)

නර්තනය (භරත) I
நாட்டியம் (பரதம்) I
Dancing (Baratha) I

53 T I

පැය දෙකයි
இரண்டு மணித்தியாலம்
*Two hours*

**அறிவுறுத்தல்கள் :**

- ※ **எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதுக.
- ※ விடைத்தாளில் தரப்பட்டுள்ள இடத்தில் உமது **சுட்டெண்ணை** எழுதுக.
- ※ விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்துப் பின்பற்றுக.
- ※ **1** தொடக்கம் **50** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (1), (2), (3), (4), (5) என இலக்கமிடப்பட்ட விடைகளில் **சரியான** அல்லது **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிந்தெடுத்து, **அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தைத் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய** விடைத்தாளில் **புள்ளடி** (×) இடுவதன் மூலம் காட்டுக.

**1.** பஞ்சகிருத்திய பரமானந்த தாண்டவத்தின் மறுபெயர்
(1) கௌரி தாண்டவம் (2) ஆனந்த தாண்டவம் (3) திரிபுர தாண்டவம்
(4) ஊர்த்துவ தாண்டவம் (5) சங்கார தாண்டவம்

**2.** கதகளி ஆடலுக்கு ஒப்பனை செய்யும் கலைஞர்
(1) கோணங்கி (2) கட்டியக்காரன் (3) சௌட்டிக்காரன்
(4) விதூஷகன் (5) நட்டுவனார்

**3.** தாள தசப்பிராணன்களில் இடம்பெறும் 'ஷட்' மார்க்கங்களில் ஒன்று
(1) வார்த்திகம் (2) களை (3) ப்லுதம்
(4) பதாகம் (5) அதீதம்

**4.** கண்டஜாதி அடதாளம் மிஸ்ரகதியுடன் சேரும்போது வரும் தாளம் எடுத்துக்கொள்ளும் எண்ணிக்கை
(1) 90 (2) 98 (3) 108
(4) 126 (5) 162

**5.** பதவர்ணத்தின் பூர்வாங்கப் பகுதியில் அடங்குபவை
(1) பல்லவி, சரணம், சரணஸ்வரம்
(2) பல்லவி, அனுபல்லவி, சரணம்
(3) அனுபல்லவி, முத்தாயிஸ்வரம், சரணம்
(4) பல்லவி, அனுபல்லவி, முத்தாயிஸ்வரம்
(5) பல்லவி, அனுபல்லவி, சரணஸ்வரம்

**6.** 'சாயி' என்று அழைக்கப்படும் அபிநயம்
(1) ஆங்கிகம் (2) வாச்சிகம் (3) சாத்விகம்
(4) வியஞ்சகம் (5) ஆஹார்யம்

**7.** தயா வீரனுக்கு உதாரணமாக இருப்பவர்
(1) கர்ணன் (2) சித்தார்த்தன் (3) அர்ச்சுனன்
(4) சிபிச்சக்கரவர்த்தி (5) ஸ்ரீ ராமபிரான்

[பக். 2 ஐப் பார்க்க

**8.** ரௌத்திர ரஸத்தின் எதிர் ரஸமாக அமைவது
(1) ஹாஸ்யம் (2) பயானகம் (3) சிருங்காரம்
(4) சாந்தம் (5) அற்புதம்

**9.** திரிகாலத் தீர்மானத்தின் காலப்பிரமாண ஒழுங்கு முறையே
(1) மத்திமம், விளம்பம், துரிதம்
(2) மத்திமம், துரிதம், விளம்பம்
(3) விளம்பம், துரிதம், மத்திமம்
(4) விளம்பம், மத்திமம், துரிதம்
(5) துரிதம், விளம்பம், மத்திமம்

**10.** வெள்ளி நிறத்தில் மட்டும் அணிகலன்களை அணிந்து ஆடப்படும் சாஸ்திரிய நடனம்
(1) மோகினியாட்டம் (2) குச்சுப்புடி (3) ஒடிசி
(4) கதக் (5) கதகளி

**11.** ; ; ; ; ; ; த, திங், கி / ண தொம் த, திங், கிண / தொம் த, திங், கிண தொம் // என்பதில் பஞ்ச ஜாதி 'த திங் கி ண தொம்' குறியீட்டில் எழுதப்பட வேண்டியது
(1) தகதிமி தகதிமி தகிட (2) தகிட தகிட தகதிமி (3) தகதிமி தகதிமி தக
(4) தகிட தகிட தகிட தகிட (5) தகதிமி தகதிமி தகதிமி

**12.** 'பர்வத யதி' என அழைக்கப்படுவது
(1) டமருக யதி (2) மிருதங்க யதி (3) விசம யதி
(4) சம யதி (5) ஸ்ரோதோவஹ யதி

**13.** ஆத்மாஸ்த வகையைச் சார்ந்த ரஸம் எது?
(1) அற்புத ரஸம் (2) ஹாஸ்ய ரஸம் (3) சிருங்கார ரஸம்
(4) கருணா ரஸம் (5) பயானக ரஸம்

**14.** தளிச்சேரி கல்வெட்டுக்கள் அமைந்துள்ள கோயில் எது?
(1) சிதம்பரம்
(2) திருப்பதி
(3) மதுரை மீனாட்சி அம்மன் கோயில்
(4) தஞ்சைப் பெருங்கோயில்
(5) ஸ்ரீரங்கம்

**15.** நாடக அரங்க அமைப்பு வகைகளில் 'விகிருதம்' என்பது
(1) வட்டம் (2) முக்கோணம் (3) செவ்வகம்
(4) சதுரம் (5) அரைவட்டம்

**16.** பிரபல வீணைக்கலைஞர் வீணை தனம்மாளின் பேத்தியான நடனக் கலைஞர் யார்?
(1) ஸ்ரீமதி ருக்மணி தேவி அருண்டேல்
(2) மயிலாப்பூர் கௌரி அம்மாள்
(3) பந்தனை நல்லூர் சபாரஞ்சிதம்
(4) அபிநய அரசி பாலசரஸ்வதி
(5) வைஜெயந்தி மாலா

**17.** ஸ்தாயி பாவங்களில் 'விஸ்மய' என்பது
(1) வெறுப்பு (2) ஆச்சர்யம் (3) உற்சாகம்
(4) கோபம் (5) வீரம்

[பக். 3 ஐப் பார்க்க

2539

**18.** ஜீவாத்மா, பரமாத்மா தொடர்பை வெளிப்படுத்தும் பரதநாட்டிய உருப்படி
(1) தில்லானா (2) அலாரிப்பு (3) புஷ்பாஞ்சலி
(4) ஜதிஸ்வரம் (5) பதம்

**19.** கண்ணப்ப நாயனார் இறைவனிடம் செலுத்திய பக்தி
(1) லாவண்ய பக்தி (2) மதுரபக்தி (3) மூர்க்க பக்தி
(4) சாக்கியபக்தி (5) வாத்சல்ய பக்தி

**20.** சாத்வீக பாவங்களில் 'அஷ்ரு' என்பது
(1) கண்ணீர் சொரிதல் (2) மூர்ச்சித்தல் (3) நடுங்குதல்
(4) குரல் மாற்றம் (5) வியர்த்தல்

**21.** 'சேகண்டி' என அழைக்கப்படும் இசைக்கருவி யாது?
(1) கைத்தாளம் (2) பறை (3) சங்கு
(4) மத்தளம் (5) சேமக்கலம்

**22.** மிஸ்ர சாபு தாளத்தில் அமைந்த அலாரிப்பில் இடம்பெறும் 'தாரிதகிண = ஜெம்,; த த ரி த கி ண ஜெம்,; =' என அமையும் தீர்மானச் சொற்கட்டில் 'ஜெம்' இற்குரிய மொத்த மாத்திரை
(1) 2 (2) 3 (3) 4
(4) 5 (5) 6

**23.** மந்திர தந்திர விளையாட்டுக்கள் இடம்பெறும் கூத்து
(1) வசந்தன் கூத்து (2) வடமோடிக்கூத்து (3) தென்மோடிக்கூத்து
(4) மகிடிக்கூத்து (5) வாசாப்புக்கூத்து

**24.** 'அபிநவ போஜா' என அழைக்கப்பட்ட மன்னன்
(1) சேவப்ப நாயக்கர் (2) ரகுநாத நாயக்கர் (3) சரபோஜி
(4) விஜயராகவ நாயக்கர் (5) மகேந்திர வர்மன்

**25.** பின்வருவனவற்றுள் கிராமியக்கலை **அல்லாதது**
(1) குச்சுப்புடி நடனம் (2) ஒயிலாட்டம் (3) பொம்மலாட்டம்
(4) ஏந்தல் நடனம் (5) மயிலாட்டம்

**26.** மேடையின் குறித்த ஓரிடத்தில் குவிவான ஒளி மூலம் ஒளியூட்டுதல்,
(1) கீற்று ஒளி எனப்படும். (2) வர்ண ஒளி எனப்படும். (3) குவிந்த ஒளி எனப்படும்.
(4) பரப்பு ஒளி எனப்படும். (5) அசையும் ஒளி எனப்படும்.

**27.** வடமொழியில் பரத முனிவரால் எழுதப்பட்ட நூல்
(1) பரத சேனாதிபதியம் (2) அபிநயதர்ப்பணம் (3) அபிநயசாரசம்புடம்
(4) பரதசங்கிரகம் (5) நாட்டிய சாஸ்திரம்

**28.** சிலப்பதிகாரத்தில் 'தண்ணுமை வாசிப்போன்' பற்றிக் குறிப்பிடும் காதை
(1) கடலாடு காதை (2) அரங்கேற்றுக் காதை (3) கானல்வரி
(4) நாடுகாண் காதை (5) இந்திரவிழா எடுத்த காதை

**29.** ;;;;;;; த திங் /, கி ண தொம் த திங், கி / ண தொம் த திங், கி ண தொம் // என்ற தாளத்தில் அமையக்கூடிய 'த திங் கி ண தொம்' அடவின் ஜாதி
(1) திஸ்ரம் (2) மிஸ்ரம் (3) கண்டம்
(4) சதுஸ்ரம் (5) சங்கீர்ணம்

[பக். 4 ஐப் பார்க்க

**30.** குறத்தியை 'வஞ்சிக்கொடி' எனச் சிறப்பிப்பது
(1) யக்ஷகானம் (2) பாமாகலாபம் (3) பாகவதமேளா
(4) குற்றாலக் குறவஞ்சி (5) பிரகலாத சரிதம்

**31.** ஒரு பயிலுனரால் ஆடப்படும் ஆரம்பப் பகுதியாகிய 'முல் மாத்ரா' இடம்பெறும் நடன மரபு
(1) றுகுனு நடனம் (2) வெஸ் நடனம் (3) சப்பிரகமுவ நடனம்
(4) கண்டிய நடனம் (5) மடு நடனம்

**32.** எழுவரோ அல்லது எண்மரோ கூடி நின்று ஆடுவது
(1) கூத்து (2) குரவை (3) பேடியாடல்
(4) வெறியாட்டு (5) பாவையாடல்

**33.** நாட்டியத்தின் இருண்டகாலம் எனக் கருதப்பட்டது
(1) ஆங்கிலேயர் காலம் (2) பல்லவர் காலம் (3) சோழர் காலம்
(4) மராட்டியர் காலம் (5) நாயக்கர் காலம்

**34.** "மகளிர் த ழீ இய துணங்கை யானும்..." என்று துணங்கைக் கூத்தைச் சிறப்பித்துக் கூறும் சங்க இலக்கியம்
(1) மதுரைக்காஞ்சி (2) பெரும்பாணாற்றுப்படை (3) பதிற்றுப்பத்து
(4) குறுந்தொகை (5) பரிபாடல்

**35.** ஜரிகை வேலைப்பாடுகள் கொண்ட வெள்ளைப் புடவை கட்டி, தலையில் வலது புறம் சாய்வாகக் கொண்டை போட்டு, அதில் வெள்ளைப் பூக்களைச் சூடி ஆடும் சாஸ்திரிய நடனம்
(1) பரத நாட்டியம் (2) கதக் (3) கதகளி
(4) குச்சுப்புடி (5) மோகினி ஆட்டம்

**36.** நாயகனிடத்தில் கோபம் கொண்ட நாயகியை சமாதானம் செய்வதில் கைதேர்ந்தவன்
(1) விடன் (2) சேடன் (3) பீடமர்த்தன்
(4) விதூசகன் (5) சடன்

**37.** இலங்கையில் கலைஞர்களுக்குக் 'கலாபூஷணம்' விருது வழங்கி கௌரவிப்பது
(1) ஜனாதிபதி செயலகம் (2) இலங்கை அரசு (3) மாகாணக் கல்வி அமைச்சு
(4) கலாச்சார அமைச்சு (5) வெளிவிவகார அமைச்சு

**38.** ஒரே மரத்தில் குடமும் தண்டியும் செதுக்கப்பட்ட வீணை
(1) இராவண வீணை (2) ஏகாந்த வீணை (3) ஆஹாரவீணை
(4) பிரம்ம வீணை (5) கோஷகா வீணை

**39.** 'எழினி' என அரங்கத்தின் திரையைக் குறிப்பிடும் காப்பியம்
(1) சீவகசிந்தாமணி (2) மணிமேகலை (3) வளையாபதி
(4) குண்டலகேசி (5) சிலப்பதிகாரம்

**40.** "எட்ட நில்லுமென்று சொல்லடி - சகியே, தொட்டணைக்கும் வேலன் கிட்ட வந்தால் - அவனை..." என்ற படலடிகள் மூலம் வெளிப்படுத்தப்படும் அஷ்டவித நாயகி
(1) கண்டிதா (2) ஸ்வாதீனபந்திரிகா (3) வாஸகஸஜ்ஜிகா
(4) அபிஸாரிகா (5) விப்ரலப்தா

● **41** தொடக்கம் **45** வரையான வினாக்களுக்கு பின்வரும் அட்டவணையைப் பயன்படுத்தி மிகப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.

| தாண்டவம் | உணர்த்தும் தொழில் | ஆடப்படும் இடம் | புலப்படுத்தும் குறியீடு | தத்துவப் புலப்பாடு |
|---|---|---|---|---|
| காளி தாண்டவம் | படைத்தல் | தாம்ரசபை | உடுக்கு | **E** |
| கௌரிகா தாண்டவம் | காத்தல் | சிற்சபை | **D** | அனைத்துச் செல்வங்களையும் வழங்கிக் காத்தல் |
| **A** | அழித்தல் | **C** | அக்கினி | ஆன்மாக்களை இளைப்பாற்றுதல் |
| திரிபுர தாண்டவம் | **B** | சித்திரசபை | ஊன்றிய திருவடி | இருவினை ஒப்பும் மலபரிபாகம் ஏற்படுத்தும் |
| ஊர்த்துவ தாண்டவம் | அருளல் | இரத்தினசபை | தூக்கிய திருவடி | மும்மலங்களில் இருந்து ஆன்மாக்களை விடுவிக்கும் |

**41.** **A** இல் இடம்பெறவேண்டிய தாண்டவம்
(1) முனிதாண்டவம் (2) சங்கார தாண்டவம் (3) ஆனந்த தாண்டவம்
(4) சந்தியா தாண்டவம் (5) சண்ட தாண்டவம்

**42.** **B** இல் இடம்பெற வேண்டிய தொழில்
(1) மறைத்தல் (2) சிரித்தல் (3) உதைத்தல்
(4) கோபித்தல் (5) கொடுத்தல்

**43.** **C** இல் இடம்பெற வேண்டிய இடம்
(1) கைலாயம் (2) பொதிகை (3) சுடலை
(4) இமயம் (5) வடகிரி

**44.** **D** இல் இடம்பெற வேண்டிய குறியீடு
(1) பூணூல் (2) பாம்பு (3) முக்கண்
(4) ஊமத்தம்பூ (5) அபயகரம்

**45.** **E** இல் இடம்பெற வேண்டிய தத்துவம்
(1) இருவினைகளைக் களைதல்
(2) இவ்வுலக இன்பங்களை வழங்குதல்
(3) அளவற்ற ஆற்றலை உயர்த்துதல்
(4) தனு கரண புவன போகங்களைப் படைத்தல்
(5) அளவிலா ஞானத்தை அறிவித்தல்

[பக். 6 ஐப் பார்க்க

**46.** இப்படத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ள ஆடல் வகை யாது?




(1) குதிரையாட்டம்
(2) மயிலாட்டம்
(3) கோலாட்டம்
(4) மானாட்டம்
(5) புலியாட்டம்

**47.** இப்படத்தில் காட்டப்பட்டுள்ள ஸ்தானக பேதம் யாது?




(1) ஏகபாதம்
(2) காருடம்
(3) சமபாதம்
(4) ஐந்த்ரம்
(5) ப்ரம்மஹஸ்தானம்

**48.** இப்படத்தில் காணப்படும் இசைக்கருவியின் பெயர் என்ன?



(1) தவில்
(2) தப்பு
(3) பறை
(4) மிருதங்கம்
(5) மத்தளம்

**49.** இப்படத்தில் காட்டப்பட்டுள்ள பரத நாட்டிய அணிகலன் யாது?



(1) நெற்றிவரி
(2) சூரியப்பிறை
(3) இராக்கொடி
(4) நத்து
(5) முத்துப்பதக்கம்

**50.** இப்படத்தில் காட்டப்பட்டுள்ள சாஸ்திரிய நடனம் யாது?



(1) கதக்
(2) கதகளி
(3) ஒடிசி
(4) கண்டிய நடனம்
(5) குச்சுப்புடி

* * *

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2021 (2022)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2021 (2022)
General Certificate of Education (Adv. Level) Examination, 2021 (2022)

නර්තනය (භරත) II
நாட்டியம் (பரதம்) II
Dancing (Baratha) II

53 T II

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
Three hours

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

**அறிவுறுத்தல்கள் :**

* **பகுதி I** இல் முதலாம் வினா உட்பட **இரண்டு** வினாக்களையும் **பகுதி II** இல் எவையேனும் **மூன்று** வினாக்களையும் தெரிவுசெய்து, எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.

## பகுதி I

**1.** (i) நீர் கற்ற பதவர்ணத்தின் இராகம், தாளம் என்பவற்றைத் தருக. (02 புள்ளிகள்)

(ii) மேலே நீர் குறிப்பிட்ட பதவர்ணத்தின் பாடலை எழுதியவர், நாட்டிய அமைப்புச் செய்தவர் ஆகியோரின் பெயர்களைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(iii) மேற்குறித்த பதவர்ணத்தின் முத்தாயிஸ்வரக் கோர்வை ஒன்றினைத் தாள அங்கக் குறியீட்டுடன் எழுதுக. (06 புள்ளிகள்)

(iv) மேற்குறித்த பதவர்ணத்தின் முதலாவது தீர்மானத்தினைத் தாள அங்கக் குறியீட்டுடன் எழுதுக. (10 புள்ளிகள்)

**2.** (i) மணிப்புரி நடனத்தின் தோற்றம் பற்றிச் சுருக்கமாகத் தருக. (03 புள்ளிகள்)

(ii) அந் நடனத்திற்குப் பயன்படுத்தப்படும் இசை, இசைக்கருவிகள் என்பன பற்றிக் குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

(iii) மணிப்புரி நடனத்தின் ஆடை, அணிகலன்கள் என்பன பற்றி விவரிக்குக. (04 புள்ளிகள்)

(iv) அந் நடனத்தின் ஆட்ட முறைகள் பற்றி விளக்குக. (05 புள்ளிகள்)

(v) மணிப்புரி நடனம் வளர்ச்சியடைந்த விதம் பற்றி விளக்குக. (05 புள்ளிகள்)

**3.** (i) வாச்சிக அபிநயத்தின் **நான்கு** வகைகளையும் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ii) மேலே (i) இல் குறிப்பிட்ட வாச்சிக அபிநயத்தின் வகைகளைச் சுருக்கமாக விளக்குக. (04 புள்ளிகள்)

(iii) நாட்டியசாஸ்திரம் கூறும் அரங்கம் பற்றிக் குறிப்புரைக்குக. (07 புள்ளிகள்)

(iv) நாட்டியப் பெண்களின் ஆடைத் தெரிவின்போது கவனத்திற் கொள்ள வேண்டிய விடயங்கள் பற்றி விவரிக்குக. (07 புள்ளிகள்)

[பக். 2 ஐப் பார்க்க

## பகுதி II

**4.** (i) வேத்தியல், பொதுவியல் என்பவற்றுக்கு இடையிலான வேறுபாட்டைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ii) சங்கமருவிய காலத்தில் நிகழ்த்தப்பட்ட பின்வரும் ஆடல்கள் பற்றி விளக்குக.

(அ) வரிக்கோலம் (04 புள்ளிகள்)

(ஆ) ஆய்ச்சியர் குரவை (04 புள்ளிகள்)

(இ) சாக்கையர் கூத்து (05 புள்ளிகள்)

(iii) சிலப்பதிகாரம் குறிப்பிடும் இசையாசிரியரின் இலட்சணங்களை விளக்குக. (05 புள்ளிகள்)

**5.** (i) பின்வரும் கூத்துக்கள் பற்றி விளக்குக.

(அ) பறைமேளக் கூத்து (03 புள்ளிகள்)

(ஆ) தென்மோடிக் கூத்து (03 புள்ளிகள்)

(ii) பின்வரும் மலையகக் கூத்துக்களின் கதைக்கரு, மேடையமைப்பு என்பன பற்றி விவரிக்குக.

(அ) காமன் கூத்து (03 புள்ளிகள்)

(ஆ) அர்ச்சுனன் தபசு (03 புள்ளிகள்)

(iii) மன்னார் பிரதேசத்தில் ஆடப்படும் கூத்து வகைகளில் **இரண்டின்** பெயர்களைக் குறிப்பிட்டு, அவற்றில் ஏதேனும் ஒன்றைப் பற்றி விளக்குக. (08 புள்ளிகள்)

**6.** (i) தஞ்சை சு. பொன்னையா அவர்களின் வாழ்க்கை வரலாற்றினைச் சுருக்கமாகத் தருக. (10 புள்ளிகள்)

(ii) அவர் கலைகளின் வளர்ச்சிக்கு ஆற்றிய பணிகளை விளக்குக. (10 புள்ளிகள்)

**7.** நிகழ்நிலை (Online) கற்றல் கற்பித்தற் செயன்முறையானது நடனச் செய்முறைப் பாடத்தில் ஏற்படுத்தியுள்ள சாதக, பாதக விளைவுகள் பற்றி ஆராய்க. (20 புள்ளிகள்)

**8.** பின்வருவனவற்றிற்குச் சிறுகுறிப்பு எழுதுக.

(i) உத்ப்ளவன பேதம்

(ii) றுகுணு நடனம்

(iii) மத்தளம்

(iv) விப்ரயோக சிருங்காரம் (5 × 4 = 20 புள்ளிகள்)

* * *